சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.நி.ம.எண்.03/2026**

**இன்**

**அசல் வழக்கு எண்.176/2017**

R.வேலு ... மனுதாரர்/பிரதிவாதி

**// எதிராக //**

G.ராஜீவ்காந்தி .... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 09.02.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.காந்தி,பி.காம்.,எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.செந்தில்குமார்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மேற்படி தாவாவில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இன்று தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்று குறியீடு செய்துகொள்ள தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்: -**

(i) தான் இம்மனுவில் மனுதாரர், தாவாவில் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் தன்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.24 17:17:35 +0530

மீது சமூகம் நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி தாவா தொடரப்பட்டு மேற்படி தாவாவில் தனது தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து விவரம் தவறு என்றும் அதன் மதிப்பும் குறைவாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்வழக்குரையில் கூறி உள்ளேன் என்றும், அதை மெய்ப்பிக்க மேற்படி சொத்திற்கான சிட்டா, மேற்படி வழக்கிற்கு சம்மந்தப்பட்ட தாவா சொத்திலுள்ள வீடு, மின் இணைப்பு ஆகியவைகளுக்குண்டான ஆவணங்கள் தற்பொழுதுதான் கிடைக்கபெற்றேன் என்றும், மேற்படி ஆவணங்களை சமூகம் கோர்ட்டில் இன்றே தாக்கல் செய்கிறேன் என்றும், மேற்படி ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து ஏற்க வேண்டியது அவசியமாகிறது என்றும், எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகும் என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளார்.

3. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :-

(i) இம்மனு பொய் மோசம் சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல முதல் நிலையிலேயே தள்ளுண்டு போகத்தக்கது. இந்த எதிருரையில் எதிர்மனுதாரர்/வாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர ஏனையவற்றை மனுதாரர்/பிரதிவாதி கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(ii) மனு அபிடவிட்டில் கண்டுள்ள பாரா சங்கதிகள் சரியல்ல வழக்கிற்காக உண்மைக்கு மாறாக ஜோடிக்கபட்டவை மேற்படி வழக்கு தொடர்ந்து பல ஆண்டுகள் கழித்து கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்யும்போதே இவைகள் வழக்கிற்காக உண்மையை வீழ்த்த தயாரிக்கப்பட்ட மோசடியான ஆவணங்களாகும்.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.24 17:17:38 +0530

(iii) மேற்படி வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் இருந்த காலாத்தில் சட்டத்திற்கு புறம்பாக தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளது தெரியவருகிறது. எதிர்மனுதாரர்/வாதி சென்னையில் வசிப்பதால் அந்த சூழ்நிலையை லாபகப்படுத்தி வீடு அமைத்துள்ளீர் அது சட்டப்படி எந்நிலையிலும் நிலைக்கதக்கதல்ல. மேற்படி மனுதாரர் /பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவண எண்:3 ஆனது 03.04.2023-என தேதியிட்ட ச.எண் 7175-ல் உள்ள வீட்டிற்கு வாதி செலுத்திய வீட்டுவரி ரசிது 2023-2024 எனக் குறிப்பிட்டுள்ளீர், அப்படியென்றால் வாதி தான் அந்த வீட்டு வரி ரசிதுக்கான பணத்தை செலுத்தினாரா அதையே நீங்கள் தவறாக காட்டியுள்ளீர் என்பது இதிலிருந்தே புலப்படுகிறது.

(iv) மனுதாரர் / பிரதிவாதி அந்த வீட்டை வழக்கு நிலுவையில் இருந்த நேரத்தில் தான் கட்டியுள்ளீர்கள் என்று நீங்கள் சமர்ப்பித்த வீட்டு வரி ரசிது -ல் இருந்தே புலப்படுகிறது அப்படி நீங்கள் வழக்கு தொடுப்பதற்க்கு முன்பே வீடு கட்டியிருந்தால் அதற்கான வீட்டு வரி ரசிது மற்றும் மின் கட்டண ரசிது -ம் வழக்கின் ஆரம்ப நிலையான பதிலுரையில் தாக்கல் செய்திருப்பீர். அப்போது வீடே இல்லாமல் தற்போது வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் அவசர அவசரமாக வீட்டை கட்டி அதன் ஆவணங்களை தயாரித்து தாக்கல் செய்வதற்காக நீர் தாக்கல் செய்துள்ள மனு புறம் அபிடவிட்-ல் தாவா சொத்திலுள்ள வீடு மின் இணைப்பு ஆகியவைகளுக்குண்டான ஆவணங்கள் தற்பொழுது தான் கிடைக்கப்பெற்றேன் என நீவே மனு மூலம் ஒப்புகொண்டுள்ளீர் இதிலிருந்தே புலப்படுகிறது தாவா நிலுவையில் உள்ள போதே நீர் வீடு கட்டியுள்ளீர்.

(v) மேற்படி வீடு வழக்கிற்கு முன்பே இருந்திருந்தால் அது எப்போது பஞ்சாயத்தில் உத்தரவு பெற்று வீடு கட்டப்பட்டது எப்போது இருந்து வீட்டு வரி செலுத்தி வருகிறீர் என்பதும், மேற்படி மின் கட்டண இணைப்பு எப்போது பொருத்தப்பட்டது, நீர்



R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.24 17:17:41 +0530

எப்போதிலிருந்து மின் கட்டணம் செலுத்தி வருகிறீர் என்பதை நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்துவது அவசியமாகும். இல்லையேல் உமது செயல் சட்டப்படி குற்றமாகும் அதனை நீதிமன்றத்துக்கு நிருபிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் மனுதாரர்/பிரதிவாதியான உம்மையே சாரும். எனவே மாண்புமிகு நீதிமன்றம் இம்மனுவை அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** :-

5. மேற்படி தாவாவில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இன்று தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்று குறியீடு செய்துகொள்ள தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்/வாதி எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, பிரமாண வாக்குமூலம், பதிலுரை, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/பிரதிவாதி தான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், தான் இம்மனுவில் மனுதாரர், தாவாவில் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் தன் மீது சமூகம் நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி தாவா தொடரப்பட்டு மேற்படி தாவாவில் தனது தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து விவரம் தவறு என்றும் அதன் மதிப்பும் குறைவாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்வழக்குரையில் கூறி உள்ளேன் என்றும், அதை மெய்ப்பிக்க மேற்படி



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.24 17:17:44 +0530

சொத்திற்கான சிட்டா, மேற்படி வழக்கிற்கு சம்மந்தப்பட்ட தாவா சொத்திலுள்ள வீடு, மின் இணைப்பு ஆகியவைகளுக்குண்டான ஆவணங்கள் தற்பொழுதுதான் கிடைக்கபெற்றேன் என்றும், மேற்படி ஆவணங்களை சமூகம் கோர்ட்டில் இன்றே தாக்கல் செய்கிறேன் என்றும், மேற்படி ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து ஏற்க வேண்டியது அவசியமாகிறது என்றும், எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகும் என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

**6.** எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், மேற்படி வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் இருந்த காலாத்தில் சட்டத்திற்கு புறம்பாக தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளது தெரியவருகிறது என்றும், எதிர்மனுதாரர்/வாதி சென்னையில் வசிப்பதால் அந்த சூழ்நிலையை லாபகப்படுத்தி வீடு அமைத்துள்ளீர் அது சட்டப்படி எந்நிலையிலும் நிலைக்கதக்கதல்ல என்றும், மேற்படி மனுதாரர் /பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவண எண்:3 ஆனது 03.04.2023-என தேதியிட்ட ச.எண் 7175-ல் உள்ள வீட்டிற்கு வாதி செலுத்திய வீட்டுவரி ரசிது 2023-2024 எனக் குறிப்பிட்டுள்ளீர், அப்படியென்றால் வாதி தான் அந்த வீட்டு வரி ரசிதுக்கான பணத்தை செலுத்தினாரா அதையே நீங்கள் தவறாக காட்டியுள்ளீர் என்பது இதிலிருந்தே புலப்படுகிறது என்றும், மனுதாரர் / பிரதிவாதி அந்த வீட்டை வழக்கு நிலுவையில் இருந்த நேரத்தில் தான் கட்டியுள்ளார்கள் என்று நீங்கள் சமர்ப்பித்த வீட்டு வரி ரசிது -ல் இருந்தே புலப்படுகிறது அப்படி நீங்கள் வழக்கு தொடுப்பதற்க்கு முன்பே வீடு கட்டியிருந்தால் அதற்கான வீட்டு வரி ரசிது மற்றும் மின் கட்டண ரசிதும் வழக்கின் ஆரம்ப நிலையான பதிலுரையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும்



R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.24 17:17:47 +0530

என்றும், அப்போது வீடே இல்லாமல் தற்போது வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் அவசர அவசரமாக வீட்டை கட்டி அதன் ஆவணங்களை தயாரித்து தாக்கல் செய்வதற்காக தாக்கல் செய்துள்ள மனு புறம் அபிடவிட்-ல் தாவா சொத்திலுள்ள வீடு மின் இணைப்பு ஆகியவைகளுக்குண்டான ஆவணங்கள் தற்பொழுது தான் கிடைக்கப்பெற்றேன் என நீவே மனு மூலம் ஒப்புகொள்ளப்பட்டுள்ளது இதிலிருந்தே புலப்படுகிறது தாவா நிலுவையில் உள்ள போதே வீடு கட்டப்பட்டுள்ளது என்றும், மேற்படி வீடு வழக்கிற்கு முன்பே இருந்திருந்தால் அது எப்போது பஞ்சாயத்தில் உத்தரவு பெற்று வீடு கட்டப்பட்டது எப்போது இருந்து வீட்டு வரி செலுத்தி வருகிறீர் என்பதும், மேற்படி மின் கட்டண இணைப்பு எப்போது பொருத்தப்பட்டது, நீர் எப்போதிலிருந்து மின் கட்டணம் செலுத்தி வருகிறீர் என்பதை நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்துவது அவசியமாகும் என்றும், இல்லையேல் உமது செயல் சட்டப்படி குற்றமாகும் அதனை நீதிமன்றத்துக்கு நிருபிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் மனுதாரர்/பிரதிவாதியான உம்மையே சாரும் என்றும், எனவே மாண்புமிகு நீதிமன்றம் இம்மனுவை அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**7.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் தாவாவில் சொத்து விவரம் தவறு என்றும், அதன் மதிப்பு குறைவாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதை மெய்ப்பிப்பதற்காக தாவா சொத்தின் சிட்டா, தாவா சொத்து சம்மந்தப்பட்ட தாவா சொத்தில் உள்ள வீடு, மின் இணைப்பு ஆகியவற்றுக்குண்டான ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும், அந்த ஆவணங்களை கூடுதல் ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.24 17:17:49 +0530

எதிர்மனுதாரர்/வாதி சென்னையில் வசிப்பதால் அந்த சூழ்நிலையை பயன்படுத்தி வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் வீட்டை அமைத்துள்ளனர் என்றும், வீட்டு வரி ரசீது செலுத்தியது யார் என்று கண்டறிய இயலாது என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது தான் வீடு கட்டி வீட்டு வரி ரசீது மின் இணைப்பிற்கான ரசீது பெறப்பட்டுள்ளதால் இம்மனுவை அனுமதிக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி கொடுத்துள்ள ஆவணங்கள் வழக்கில் பெற்று குறியீடு செய்யும்போது தான் அது இந்த வழக்கிற்கு எந்தவகையில் அவர்கள் சொல்லும் வாதத்திற்கு ஆதரவாக உள்ளதா இல்லையா என்பதை தீர்மானிக்க முடியும். அவ்வாறு இல்லாமல் தற்போதைய நிலையிலேயே மனுவை நிராகரிப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக**, மேற்படி தாவாவில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இன்று தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்று குறியீடு செய்துகொள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.24 17:17:53 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

<u>**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**</u> : -

-- இல்லை -

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.24 17:17:57 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.